29th January 1972]

மதிப்பீட்டில் அதை நிறைவேற்றித் தர வேண்டுமென்று அறநிலையப் பாதுகாப்புத் துறையை மாநகராட்சி கேட்டிருக்கிறது. அது அறநிலையப் பாதுகாப்புத் துறையின் பரிசீலனையில் இருந்துவருகிறது.

Secondary Education Board

* 56 *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether the Government have constituted a Secondary Education Board in the State; and

(*b*) if so, the details thereof?

இடைநிலைக் கல்வி வாரியம்.

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம்மாநிலத்தில் இடைநிலைக் கல்வி வாரியம் ஒன்றை அரசு அமைத்துள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம். மாநில இடைநிலைக் கல்விக் குழு 25—10—1971 நாளிட்ட 1828 எண்ணுள்ள அரசாணையின்படி (நிலை) திருத்தி அமைக்கப்பட்டு பணியாற்றி வருகிறது.

(இ) இக்குழு பதினேழு நபர்களைக் கொண்டது. அவர்கள் கீழ்க்கண்ட சார்பிற்கு பிரதிநிதியாவார் :—

அரசு அதிகாரிகள் (அலுவலால் உறுப்பினர்) ...	5
மதுரைப் பல்கலைக் கழகம்	2
அண்ணாமலை பல்கலைக் கழகம்	1
ஆசிரியர் சார்பில்	2
நிர்வாகத்தினர் சார்பில்	3
சென்னைப் பல்கலைக் கழகம்	4

இது சட்டரீதியற்ற ஒரு குழுவாகும். பள்ளிக் கல்வி இயக்குநரே இதன் தலைவர்.

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : தலைவர் அவர்களே, இந்த வாரியத்தில் சட்டப் பேரவை, சட்டமன்ற உறுப்பினர்கள் எவரும் இடம் பெறவில்லை என்று அறிகிறேன். அதற்குக் காரணம் என்ன என்பதையும் அவர்கள் ஒருவர் இருவர் இதில் இருப்பது பயனுள்ளதாக இருக்கும் என்பதையும் சொல்லி அதை அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இதற்கென்று தனி விதிமுறை இருக்கிறதா இல்லையா என்று தகவல் இல்லை. தனிக் கேள்வி போட்டால், அறிந்து சொல்ல முடியும். அதில் சட்டமன்ற உறுப்பினர்களும் இடம் பெறச் செய்ய இயலுமா இயலாதா என்று தெரியவில்லை. அந்தக் கருத்தை வேண்டுமானால் பரிசீலிக்கலாம்.

திரு. எம். ராஜா அய்யர் : இடைநிலைக் கல்வி வாரியம் ஆண்டுக்கு எத்தனை முறை கூடுகிறது ? இதற்கு முன் இருந்த வாரியம் கூடவேயில்லை என்ற புகார் அரசிற்கு வந்திருக்கிறதா ? ஆண்டுக்கு இத்தனை முறை கூடவேண்டுமென்ற விதியிருக்கிறதா ? அது அனுஷ்டிக்கப்படுகிறதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இந்தக் குழுவின் காலம் 3 ஆண்டு என்று வரையறுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் ஆண்டுக்கு இத்தனை முறை கூட வேண்டுமென்ற விதிமுறை இருக்கக் கூடும். இதற்கு முன்னால் சரியாகக் கூடாமல் இருந்தது. அப்படியிருக்கக் கூடாது என்றுதான் திருத்தியமைக்கப்பட்டு அதன் பணிகள் செம்மையாக ஆற்றப்பட வேண்டுமென்ற அறிவிப்பு தரப்பட்டிருக்கிறது.

THIRU A. R. DAMODARAN : Sir, may I know whether the subject of reforms in the educational system in so far as secondary education is concerned, are placed before this Board for its advice or whether the Board has any other functions ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பொதுவாக இடைநிலைக் கல்வி பற்றி, பொதுவான பிரச்னைபற்றி, அவ்வப்போது ஆலோசனை கூறுவதற்குத்தான் இந்தக் குழு இருக்கிறது. சிலபல் மற்றவைகளுக்கு தனிக் குழுக்கள் தனித்தனியாக அமைத்து அந்தந்தத் துறைக்கு உரிய வல்லுநர்களும் விற்பன்னர்களும் அடங்கிய குழுக்கள் அமைக்கப்பட்டு அவர்கள் ஆராய்கிறார்கள். அந்த சிலபல் எல்லோருடைய பரிசிலனைக்கும் வைக்கப்பட்ட பிறகு நடைமுறைப்படுத்தும் முறை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

Tailoring Instructor

*57 Q.—THIRU M. RAJAH IYER : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) the qualifications prescribed for tailoring instructors serving in Secondary Schools; and

(b) whether any such qualified tailoring instructor serving in the Virudhunagar Educational District, has been denied his salary as unqualified ?

தையற்கலை ஆசிரியர்.

திரு. எம். ராஜா அய்யர் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) உயர்நிலைப் பள்ளிகளில் தையற்கலை ஆசிரியர் பதவிகளுக்கு வரையறுக்கப்பட்ட தகுதிகள் யாவை ?

(இ) விருதுநகர் கல்வி மாவட்டத்தில் பணியாற்றும் அத்தகைய தகுதியுடைய தையற்கலை ஆசிரியர் யாருக்கேனும், அவர் தகுதியற்றவர் என்ற காரணம் காட்டப்பட்டு ஊதியம் மறுக்கப்பட்டதா ?